# தமிழ் இலக்கியங்களில் சுற்றுச்சூழலும் மக்கள்வாழ்வும்

**முனைவர் சு.செல்வக்குமார்**
உதவிப்பேராசிரியர்- தமிழ் இலக்கியத்துறை
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி பொள்ளாச்சி-1
ORCHID –https;//orchid.org 0000-0002-3445-3476

**ஆய்வுச்சுருக்கம்**

சுற்றுச்சூழல் என்பது மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்த கூறாகும். சுற்றுச்சூழல் இல்லாமல் மனித வாழ்வும் பண்பாடும் சிறக்காது. மனிதனின் உடல்சார்ந்த பரிணாமத்திலும் பண்பாடு சார்ந்த பரிணாமத்திலும் சுற்றுச்சூழலின் பங்கு குறிப்பிடத்தக்கது. சுற்றுச்சூழல் என்பது அங்கு வாழும் மக்களுடைய பண்பாட்டுக்கூறுகளுள் ஒன்றாக அமைகிறது. எந்த வகையான இலக்கிய வடிவமாக இருந்தாலும் மக்கள் வாழ்க்கையைப் பாடும்போது சுற்றுச்சூழலைத் தவிர்த்துவிட முடியாது. சுற்றுச்சூழலுக்கும் மக்களின் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதே இதற்குக் காரணம். அவ்வகையில் தமிழில் சங்ககாலம் தொட்டு இன்றைய புதினம் வரை எழுதப்பட்டுள்ள இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள சுற்றுச்சூழல் பதிவுகள் மனித வாழ்வோடு பொருந்தியுள்ள பாங்கை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

திறவுச்சொற்கள் – சுற்றுச்சூழல், பதிவுகள், பண்பாடு, பரிணாமம், புதினம்

**முன்னுரை**

இப்பூவுலகில் வாழும் மனிதனின் பரிணாமமும் பரிமாணமும் சுற்றுச் சூழலையொட்டியே நிகழ்ந்து வந்துள்ளன. மனிதனின் உடல்சார்ந்த பரிணாமத்திலும் பண்பாடு சார்ந்த பரிணாமத்திலும் சுற்றுச்சூழலின் பங்கு குறிப்பிடத்தக்கது. சுற்றுச்சூழல் என்பது அங்கு வாழும் மக்களுடைய பண்பாட்டுக்கூறுகளுள் ஒன்றாக அமைகிறது. ஒரு சமூகத்தின் பண்பாட்டை அச்சமூகத்தில் வாழும் மனிதர்கள் கட்டமைக்கிறார்கள் என்பதைவிட சுற்றுச்சூழலே அப்பண்பாட்டுக் கட்டமைப்புக்குப் பெரும்பங்காற்றுகின்றது என்று சொல்லமுடியும். சுற்றுச்சூழல் நாட்டுக்கு நாடு இடத்திற்கு இடம் வேறுபடவும் மாறுபடவும் கூடியது. சுற்றுச்சூழல் ஒரு சமூகத்தின் பண்பாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதால் ஓரிடத்தின் சூழலுக்கேற்ப பண்பாடுகளிலும் மாற்றங்களைக் காணமுடியும். இதனால்தான் மனித வாழ்வியலைப் பேசும் இலக்கியங்களில் சுற்றுச்சூழல் குறித்த பதிவுகள் பெரும்பாலும் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. தமிழ்மொழியில் பண்டைய இலக்கியங்களாகிய சங்க இலக்கியம் தொடங்கி தற்கால இலக்கியங்கள் வரை சுற்றுச்சூழல் குறித்த பதிவுகள் மிகுதியாகக் காணக்கிடக்கின்றன. ஒரு குறிப்பிட்ட

இடத்தில் ஒரு குறிப்பிட்ட சூழலைப் பின்னணியாகக் கொண்டு வாழும் மனிதர்களின் வாழ்வியலைப் பேசுகின்ற இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள சுற்றுச்சூழல் பதிவுகள் அந்த மக்களைப் புரிந்துகொள்ளப் பெரும்பங்காற்றவல்லன. அவ்வகையில் தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள சுற்றுச்சூழல் பதிவுகள் குறித்து ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

**சூழல், சூழலியல் பற்றி அறிஞர்களின் கருத்துக்கள்:**

சூழல் என்பதற்கு தமிழ்மொழி அகராதி பின்வருமாறு விளக்கங்களை முன்வைக்கின்றன. சூழல் என்பதற்கு, **ஆராய்தல், ஆலோசனை, இடம், கருத்து, குறிப்பு, சுற்றுப்புறம் எனப் பலபொருள் கொள்ளப்படுகின்றன. அருவிகள், காடுகள் என்ற இயற்கைச் சூழலையும் குறிக்கிறது** (நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழி அகராதி, ப.702) **சூழலியல் என்பது தங்கள் சுற்றுப்புறத்தோடு உயிரினங்களுக்கு உள்ள உறவுபற்றிய ஆய்வு மட்டும்தானா? அது மட்டுமன்று சூழலியல் உயிரியலியன் ஒரு பிரிவாக மட்டும் விளங்களில்லை. இது இயற்கை, அறிவியல், சமூக அறிவியல், தத்துவ இயல் ஆகியவற்றை இணைத்து இயற்கையை முழுமையாகப் புரிந்துகொள்ள முனைகின்றது. எல்லா உயிர்களும் ஒன்றையொன்று சார்ந்திருக்கும் தன்மைதான் சூழலியலின் அடிப்படையாகும்.** (இன்னாசிமுத்து, பூவுலகின் நண்பர்கள், சூழலியல் ஓர் அறிமுகம், ப.7) சூழல் என்பது தாவரங்கள். விலங்குகள், பறவைகள், மனிதர்கள், காற்று, நீர், மண், நெருப்பு, வெளி, பருவங்கள் என அனைத்தையும் உள்ளடங்கிய ஒரு தொகுதியைக் குறிக்கின்றது. சுற்றுச்சூழல் என்பது இந்தப் புவிக்கிரகத்தோடு தொடர்புடைய உயிருள்ள உயிரற்ற அனைத்தையும் உள்ளடக்கியது ஆகும் என்பது தெளிவாகிறது.

**தொல்காப்பியத்தில் சுற்றுச்சூழல் பதிவுகள்**

தொல்காப்பியம் என்ற தமிழின் மிகத்தொன்மையான இலக்கணநூலில் சுற்றுச்சூழல் குறித்த பதிவுகளையும் அச்சுற்றுச்சூழலுக்கு ஏற்ப அமைந்த மக்களின் வாழ்க்கை பற்றி பதிவினையும் காணமுடிகின்றது. இலக்கியப் படைப்பிற்கான தொல்காப்பிய இலக்கணம் பொருளதிகாரமாகும். தமிழ்கூறும் நல்லுலகத்திலுள்ள வேறுபட்ட நிலப்பகுதிகளிலிருந்து எழும் அக இலக்கியங்கள் அந்தந்த நிலத்திற்குரிய சுற்றுச்சூழல் பின்புலங்களைக் கவனத்தில் கொண்டு படைக்கப்படல் வேண்டும் என்பதற்காகவே முதல், கரு, உரிப் பொருட்களை உள்ளடக்கிய திணைஇலக்கியக் கோட்பாட்டைத் தொல்காப்பியர் வகுத்துள்ளமை தெரியவருகின்றது. நிலத்தின் சுற்றுச்சூழல் அங்குள்ள மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதைத் தொல்காப்பியர் நன்குணர்ந்து சிறப்புவாய்ந்த திணை இலக்கியக்கோட்பாட்டை உருவாக்கியுள்ளார் என்பதையும்

உறுதியாகக் கூறமுடியும், தொல்காப்பியர் ஓர் இலக்கியப் படைப்பில் முதற்பொருளையடுத்து இடம்பெற வேண்டியது கருப்பொருளாகும் என்கின்றார். கருப்பொருள்கள் என்பன அக்கதைக்களத்தில் இடம்பெறுகின்ற தெய்வம், உணவு, விலங்குகள். மரம், செடிகொடிகள், பறவைகள், தோற்கருவிகள், அப்பகுதிவாழ் மக்களின் தொழில், யாழ் போன்ற நரம்புக் கருவிகள், ஊர், நீர், பூ போன்றன என்பதை,

**தெய்வம், உணாவே, மா, மரம், புல், பறை**
**செய்தி, யாழின் பகுதியொடுதொகைஇ**
**அவ்வகைபிறவும்கருவெனமொழிப (தொல்.பொருள். நூற்:16)**

என்ற நூற்பாவில் எடுத்துரைக்கின்றார். ஓர் இலக்கியம் மக்களின் உணர்வுகளையும் எண்ணங்களையும் வாழ்க்கையையும் பிரதிபலிக்கும் முன்பு அதாவது உரிப்பொருளைப் பிரதிபலிக்கும்போது முதல், கருப்பொருள்களின் பின்னணிகளை அமைத்துச் சொல்லவேண்டும் என்றும் அப்பொழுதுதான் அம்மக்களின் பண்பாட்டைத் தெளிவாக்க முடியும் என்றும் விளக்குவதற்காகவே தொல்காப்பியர் இம்மூன்றையும் வரிசைப்படுத்திக் காட்டியுள்ளார். இக்கருத்துக்கு,

**முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங்காலை முறை சிறந்தனவே**
**பாடலுள் பயின்றவை நாடுங்காலை (தொல்,பொருள். நூற் : 3)**

என்ற தொல்காப்பிய அடிகள் சான்றுகளாகின்றன. சூழலின் ஒரு கூறாக மனிதன் விளங்குவதால் குழலைத் தவிர்த்து மனித வாழ்க்கையைப் பாடுவது என்பது இலக்கியத்தில் முழுமைதராது என்பதை உணர்ந்த தொல்காப்பியர் படைப்பில் சூழலுக்கு முக்கியத்துவம் கொழிக்க வேண்டுமென்பதை ஆணித்தாமமாகப் பல நூற்பாக்களில் சுட்டியுள்ளமை சிந்திக்கத்தக்கதாகும். தொல்காப்பியத்தில் மரபியலில் தாவரங்கள், விலங்குகள், பிற உயிரினங்களைப் பற்றிய பதிவுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

### சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல் பதிவுகள்

தொல்காப்பியச் சிந்தனைகளின் பிரதிபலிப்புகளை சங்க இலக்கியங்களின் காணமுடியும். சுற்றுச்சூழல் பதிவுகள் தொல்காப்பியத்தில் மிகுதியாகக் காணப்படுவதைப் போலவே சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. பத்துப்பாட்டு நூல்களில் முதலாவதாக வைத்துப் போற்றப்படுகின்ற. திருமுருகாற்றுப்படையில் பழமுதிர்சோலை என்ற இடத்தின் சுற்றுச்சூழல் மிக நேர்த்தியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**……………………………………பலவுடன்**
**வேறுபல் துகிலின் நுடங்கி, அகில்சுமந்து (திருமுருகு. அடி. 295-296)**

எனவரும் திருமுருகாற்றுப்படை என்ற பாடலடிகளில் பல்வேறு துகிற்கொடிகள் ஒருங்கே அசைந்தாற் போன்று அசைந்து, அகிலைச் சுமந்து, சந்தன மரத்தைச் சாய்த்துத் தள்ளி, சிறு மூங்கிலின் கொப்பு தனிக்குப்படி வேரைப்பிளந்து, விண்முட்டிய மலையின் மிசைத் தொடுத்த ஞாயிற்று மண்டிலத்தை ஒத்த தேனிறால்களைக் கெடுத்து, ஆசினிப்பலாவின் சுளைகள் தன்னிடத்தே கலக்கச் சுரபுன்னையின் மலர்கள் உதிர, கருங்குரங்குகளும் முசுக்கலைகளும் நடுங்கி நிற்ப, பிடியானைகள் குளிப்பவீசிப் பெரிய களிற்று யானைகளின் முத்துக்களையுடைய வெள்ளிய கொம்புகளை உள்ளடக்கிக் கொண்டு குதித்து, நல்ல பொன்னும் மணியும் நிறம் விளங்கும்படி செய்து, பொடியாகிய பொன்னைக் கொழித்துக் கொண்டு, வாழையின் பெரிய அடிமரம் ஒடியவும், தெங்கின் இளர்நீர்க் குலை உதிரவும். அவற்றைத் தாக்கி மிளகுக் கொடியின் கரிய கொத்துக்கள் சாய, பீலியையுடைய மயில்களோடே கோழிப் பெடைகள் கெட்டோட ஆண்பன்றியும், பனையின் செறும்பு போன்ற கரிய மயிர் பொருந்திய உடலையுடைய கரடிகளும் மலைமுழைஞ்சுகளிலே புகுந்து ஒடுங்கயும். கரிய கொம்பினையுடைய ஆமான் ஏறுகள் முழங்கவும் மலையுச்சியினின்றும் இழும் என்னும் ஓசையுண்டாகக் குதிக்கும் அருவியையுடையதும் பழம் முற்றின சோலைகளை உடையதும் ஆன மலைக்கு உரிமையை உடையோனாகிய முருகப் பெருமாளே என்று பாடும் நக்கீரர், இயற்கையாகிய சுற்றுச்சூழலை முருகப்பெருமானின் வழிபாட்டுத் தன்மையுடன் இரண்டறக் கலந்தளித்துள்ள பாங்கினைச் சுவைக்க முடிகின்றது

பத்துப்பாட்டின் இரண்டாம் பத்தாக அமைந்த பொருநராற்றுப்படையில் காவிரி நாட்டுச்சிறப்பை எடுத்தோதும் பகுதிகள் அன்றையக்காலகட்ட சோழநாட்டுச் சுற்றுச் சூழலைப் படம்பிடிப்பன ஆகும். அதேபோல சிறுபாணற்றுப்படையிலும் சுற்றுச்சூழல் பதிவுகள் காணப்படுகின்றன. இவ்வாற்றுப்படை ஒரு வேனிற்காலச் சூழலை எடுத்துக்காட்டித் தொடங்குகின்றது. மற்ற ஆற்றுப்படை நூல்களிலும் பிற பத்துப்பாட்டு நூல்களிலும் அவ்வக்காலகட்டச் சுற்றுச்சூழல் பதிவுகளைக் காணமுடிகின்றது. எட்டுத்தொகையில் பாலைத்திணையில் அமைந்த அகப்பாடல் ஒன்று பாலைநிலத்தின் சூழலைப் பின்வருமாறு படம்பிடிக்கின்றது.

**……… ……… ……… சிறந்த**
**வேய்மருள் பனைத்தோள் நெகிழ, சேய் நாட்டுப்**
**பொலங்கல வெறுக்கை தருமார் (அகம். பா.1. அடி. 7-9)**

தலைவனின் பிரிவை ஆற்றமுடியாமல் தவிக்கும். தலைவி தன்தோழியிடம் தலைவன் சென்ற பாலைநிலத்தின் இயல்பைச் சொல்வதாக அமைந்த இப்பாடலில் பாலை நிலச்சூழல் படப்பிடிக்கப்பட்டுள்ளது. அவர் கடந்து சென்ற காடு நெருப்புப் போன்ற ஞாயிற்றின் கதிர்கள் நிலம் பிளக்குமாறு சுடுவதால் நிழல் சுருங்க வாடிய மரங்களை

உடையது: பாறைகள் கொதித்து நீரற்ற சுனைகளில் ஈரம் இல்லாமற் போகும்படிக் காய்தலால் அங்கு சொரியும் மூங்கில் நெல்லும் பொரியும் வெம்மை உடையது; வழிப்போவார் யாரும் இல்லாததால் ஆறலைக்கள்வரும் தொழிலற்றுச் சோம்பி இருக்கச் சுரம் பொலிவிழந்த வழிகளை உடையது; சூறாவளிக்காற்றுச் சுழன்று அடித்தலால் அசையும் கிளைகளையுடைய நார் இல்லாத முருங்கையின் குலைந்த வெண்பூக்கள், உடைந்த கடல் அலையின் வெண்மையான துளிகளைப் போல் பரந்து கிடப்பது கடலின் கரையகம் போன்ற தோற்றத்தைத் தந்தது என்பது மேற்கண்ட பாடல் கருத்தாகும்.

**சிலப்பதிகாரத்தில் சுற்றுச்சூழல் பதிவுகள்**

சங்க இலக்கியங்களுக்குப்பின் இளங்கோவடிகளால் எழுதப்பட்ட சிலப்பதிகாரக் காப்பியத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகளின் அக்காலத்திய சுற்றுச்சூழல் பதிவுகளைக் காணமுடிகின்றது. சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்றபொழுது அங்குள்ள மலைவாழ் மக்கள் அவனுக்குப் பரிசளிக்க வருகின்றனர். அந்தப் பரிசுப் பொருள்கள் அங்குள்ள குறிஞ்சிநிலப் பொருட்களாக இருக்கின்றன. அவையே குறிஞ்சி நிலத்தின் சூழலையும் அந்த மலைவாழ் நில மக்களின் வாழ்க்கையையும் எடுக்காட்டுவனவாக உள்ளன.

**திறைசுமந்து நிற்கும் தெய்வர் போல**
**யானை வெண்கோடும் அகிலின் குப்பையும்**
**மான்மயிர் கவரியும் மதுவின் குடங்களும்**
**சந்தனக் குறையும் சிந்துரக் கட்டியும்**
……. ….. …… ……
**கானக் கோழியும் தேன்மொழிக் கிள்ளையும்**
**மலைமிசை மாக்கள் தலைமிசைக் கொண்டாங்கு (சிலம்பு, காட்சிக்காதை, பா.அடி.36-55).**

அந்தக் குறிஞ்சி நிலத்தில் காணப்பட்ட மரங்கள், பூக்கள், நீர்நிலை, பண், மக்கள். விலங்குகள், கனிகள் செடிகொடிகள், நறுமணப் பொருட்கள் யாவற்றையும் இளங்கோவடிகள் பதிவுசெய்துள்ள பாங்கு அந்த மக்கள் அந்தச் சுற்றுச்சூழல் கூறுகளோடு கொண்டுள்ள உறவுநிலையை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. பல்வேறுபட்ட உயிரினங்கள் வாழ்ந்த **பல்லுயிர்ப் பெருக்கம்** (Bio:Diversity) நிறைந்த மண்மண்டலமாக சேரநாடு விளங்கியுள்ளமை நோக்கத்தக்கது.

**கவிதைகளில் சுற்றுச்சூழல் பதிவுகள்**

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை இலக்கியங்களில் வேறு ஏதேனும் ஒரு பாடுபொருளின் நிமித்தமாகச் சுற்றுச்சூழல் கூறுகள் பதிவுசெய்யப்பட்டன. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த இலக்கியங்களுள் பல சுற்றுச்சூழலையே பாடுபொருளாக்கி அமைகின்றன. முந்தைய இலக்கியங்களில் சுற்றுச்சூழலின் வளம் கொண்டு மக்கள் வாழ்க்கையைப் படைப்பாளிகள் எடுத்துக்காட்டினர். பிந்தைய இலக்கியங்களில் சுற்றுச்சூழல் சீரழிவை எடுத்துக்காட்டி மக்கள் வாழ்க்கையின் சீரழிவுகுறித்து எச்சரிக்கின்றனர். இந்தியாவின் இயற்கைச் சூழலைப் பாரதியாரின்,

**இனிய பொழில்கள் நெடிய வயல்கள்**
**எண்ணரும் பெருநாடு;**
**கனியும் கிழங்கும் தானி யங்களும்**
**கணக்கின் றித்தரு நாடு - இது**
**கணக்கின் றித்தரு நாடு (பாரதியார் கவிதைகள் பா.56)**

என்ற அடிகள் எடுத்துக் காட்டவல்லன.

**ஐம்பூதங்களை மாசுறுத்தாதே மனிதா!**
**ஏனென்றால் அவையே நீ**
**நீயே அவை ஐம்பூதங்களை மாசுறுத்துவோன்**
**தற்கொலை - கொலை என்னும்**
**இரண்டு குற்றங்களுக்கும் இலக்காகிறான்.**
**மறவாதே! காற்று - உன் உயிர்**
**தண்ணீர் - உன் உடல் (வைரமுத்து, சூழலைக்காப்போம், ப.26)**

என்ற கவிதை சூழுல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தக்காணலாம்.

**இயற்கையை மனிதன் வஞ்சித்தால் இயற்கை மனிதனை வஞ்சிக்கும் என்று பிரிடெசிக் ஏங்கல்ஸ் 120 ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய புகழ்மிக்க இயற்கையின் இயக்கவியல் என்ற தனது நூலில் குறிப்பிடுகிறார். அது இன்றைக்குச் சாலப் பொருத்தமாக உள்ளது. (வே.துரைமாணிக்கம், உருக்குலையும் உழவுத்தொழில், ப.51)** என்ற கருத்து இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

**புதினங்களில் சுற்றுச்சூழல் பதிவுகள்**

மனித வாழ்க்கையை முழுமையாகப் படம் பிடிக்கத்தக்க இலக்கிய வகையாக விளங்குகின்ற புதின இலக்கியம் தற்காலத்தில் சுற்றுச்குழலை நன்றாகவே பதிவுசெய்து வருகின்றது. பல்வேறு பாடுபொருள்களை மையப்படுத்தி புதினங்கள் வெளிவந்து கொண்டுள்ள இன்றைய சூழலில் சுற்றுச்சூழல் பாதிப்பை வெளிப்படுத்தும் வகையில் பல

பதினங்கள் வெளிவந்துள்ளன. தமிழில், சுற்றுப்புறச்சூழல் சீர்கேட்டினால் சிதைவுறும் மக்கள் வாழ்க்கையைப் பேசிய படைப்பாளிகளுள் குறிப்பிடத்தக்கவராக சுப்ரபாரதிமணியன் விளங்குகின்றார். இவருடைய பிணங்களின் முகங்கள், சாயத்திரை ஆகிய புதினங்களில் சுற்றுச்சூழல் சீர்கேட்டால், குறிப்பாக சாயக்கழிவுகளாலும் தொழிற்சாலைப் பெருக்கங்களாலும் மக்கள் வாழ்க்கையில் நேரிடும் துயரங்களை எடுத்துக்காட்டியுள்ளார். வைரமுத்துவின் கள்ளிக்காட்டு இதிகாசம், வெ.இறையன்புவின் ஆத்தங்கரை ஓரம் ஆகிய புதினங்கள் அணைக்கட்டுகள் கட்டப்படும்போது அந்தப் பகுதியின் சுற்றுச்சூழலும் மக்கள் வாழ்க்கையும் பாதிப்படைவதைப் பேசுகின்றன.

சமகாலப் புதினங்களில் கற்றுச்சூழல் சீரழிவு குறித்த பதிவுகள் மட்டுமின்றிப் பிற சுற்றுச்சூழல் தன்மைகளும் இயல்பாகவே பதிவு செய்யப்படுகின்றன. அத்தகைய சுற்றுச்சூழல் பதிவுகளும் புதினங்களில் ஒரு வட்டாரம் அல்லது பகுதி குறித்த சுற்றுச்சூழல் அறிவைப் பெறுவதற்குத் துணைபுரிகின்ற வகையில் அமைகின்றன. வைகை அணையின் நீர்ப்பிடிப்பகுதியைக் கதைக்களமாகக் கொண்டு அமைந்துள்ள **கள்ளிக்காட்டு இதிகாசம்** என்ற புதினத்தில் அப்பகுதியின் சுற்றுச்சூழல் 1956 களில் எவ்வாறு இருந்தது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்தப் பதிவுகள் ஓர் ஆவணமாக அமையவல்லவனவாகும். **அதுவேறு உலகம்; பூமிப்பரப்பில் இன்னொரு கிரகம்: மேகங்களால் நிராகரிக்கப்பட்டு இயற்கையால் சபிக்கப்பட்டு மேகங்கள் கடக்கும்போது தேவதைகள் கண்மூடிக் கொள்ளும் வறண்ட நிலம்.**

**கருவேலமரம், பொத்தக்கள்ளி, சிலுவை, கற்றாழை, சப்பாத்திக்கள்ளி, இலந்தை, நெருஞ்சி, சில்லி, பிரண்டை, இண்டஞ்செடி, சூரான்கொடி முதலான வானத்துக்குக் கோரிக்கை வைக்காத தாவரங்களும், நரி, ஓணான், அரணை, ஓந்தி, பூரான், பாம்பு முதலான விலங்கினங்களும் கழுகு, பருந்து, காடை, கௌதாரி, சிட்டு, உள்ளான், வல்லூறு முதலிய பறவை இனங்களும் மற்றும் மனிதர்களும் வாழும் மண்மண்டலம்.**

**கரும்பாறையிலும் – சரளையிலும்- சுக்கான் கல்லிலும் முள் மண்டிய நிலங்களிலும் தொலைந்து போன வாழ்வை மீட்டெடுக்கும் போராட்டம்தான் அவர்களின் பொழப்பு” (வைரமுத்து, கள்ளிக்காட்டு இதிகாசம், அத்.1,ப.16)** என்று புதினத்தின் தொடக்கத்திலேயே அமையும் இவ்வரிகள் முற்றிலும் அங்குள்ள சூழ்நிலையைப் படம்பிடித்துக் காட்டி நிற்கின்றன. கோபல்லகிராமம் புதினத்தில் கம்மவார்களின் வாழ்வியலோடு அவர்கள் வாழ்ந்த சுற்றுச்சூழலை, **அந்தக் காட்டில் அவர்களுக்குத் தின்பதற்குப் பனம்பழங்கள், கோவைப் பழங்கள், கள்ளிப் பழங்கள், நெய்த்தக்காளி முதலியன கிடைத்தன. …. ……. மஞ்சணத்தி, பூவரசு, வேம்பு முதலிய நீண்ட மரக்கிளைகளால் முகடுகட்டி பனைநார்களால் கட்டினார்கள். சீனகப் புற்களையும் கம்பத்தட்டைகளையும் அறுத்துக் காயவைத்து அவைகளால் கூரை வேய்ந்தார்கள்.**

**பிரம்மாண்டமான கள்ளிக்காட்டோடு அவர்கள் போராடினார்கள். கள்ளிகளை வெட்டிக் குவித்துக் குவித்து அதுவே அவர்கள் திருத்திய இடங்களை மலைபோல் காத்துக் கொண்டு விட்டது. (கி.ராஜநாராயணன், கோபல்ல கிராமம், ப.90)** என்று பதிவு செய்துள்ளார் கி.ராஜநாராயணன்.

## முடிவுரை

எந்த வகையான இலக்கிய வடிவமாக இருந்தாலும் மக்கள் வாழ்க்கையைப் பாடும்போது சுற்றுச்சூழலைத் தவிர்த்துவிட முடியாது என்பது தெளிவாகின்றது. சுற்றுச்சூழலுக்கும் மக்களின் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதே இதற்குக் காரணம் என்ற கருத்து மேற்கண்ட இலக்கியச் சான்றுகளால் உறுதியாகின்றது. தன்னைச் சுற்றிவாழும் உயிரினங்களையும் உணவுப் பொருட்களையும் அரசனுக்குப் பரிசளித்த மலைவாழ் மக்களின் செயலும் அவற்றைப் பெற்றுக்கொண்ட அரசனின் இயல்பும் சுற்றுப்புறச்சூழலில் வாழும் உயிரினங்களைப் பெரிதென மதிக்கின்ற அவர்களின் மாண்பும் போற்றத்தக்கன. சிலப்பதிகாரத்திற்குப்பின் தோன்றிய தேவாரப் பாடல்களிலும் நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களிலும் முக்கூடற்பள்ளு, குற்றாலக் குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியங்களிலும் காணப்படும் சுற்றுச்சூழல் கூறுகள் அவ்வக்காலச் சுற்றுச்சூழலையும் அத்துடன் வாழ்ந்த மக்களின் வாழ்வியலையும் அறியத்துணைபுரிவனவாகும்.

## துணைநூற்பட்டியல்

1. இன்னாசிமுத்து, சுற்றுச்சூழல் விழிப்புணர்வும் மாசுக்கட்டுப்பாடும், வானதி பதிப்பகம், தியாகராயர் நகர், சென்னை-17 ஜீலை-2001.
2. எட்டுத்தொகை, நியுசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி.லிட்),அம்பத்தூர், சென்னை-600098, மூன்றாம் பதிப்பு-பிப்ரவரி-2007.
3. கதிரைவேற்பிள்ளை, நா. தமிழ்மொழி அகராதி, சுரதா பதிப்பகம் ஜீ-4 சாந்தி குடியிருப்பு, இராயபேட்டை.சென்னை-14,அக்டோபர்-2003
4. சிலப்பதிகாரம்,(வேங்கடசாமி நாட்டார் உரை) ராமையாபதிப்பகம், திருவல்லிக்கேணி சென்னை-005, அக்.2005.
5. சுற்றுச்சூழல் புதிய கல்வி, நியு எட்-பப்ளிகேசன்42ஃ30 இராணிமங்கம்மாள் காலனி, திண்டுக்கல்-001.
6. சூழலைக்காப்போம், பொன்நாவரசு அறக்கட்டளை,43, இரண்டாவது முதன்மை சாலை, கஸ்தூரி நகர், அடையாறு, சென்னை-1977.

7. துரைமாணிக்கம், வே. உருக்குலையும் உழவுத்தொழில், நியுசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி.லிட்), அம்பத்தூர், சென்னை-600098, மூன்றாம் பதிப்பு-பிப்ரவரி-2005.
8. தொல்காப்பியர், தொல்காப்பியம், முல்லை நிலையம், பாரதிநகர் தெரு, தி.நகர், சென்னை-17. பிப்ரவரி- 2000
9. பத்துப்பாட்டு, நியுசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி.லிட்), அம்பத்தூர், சென்னை-600098, மூன்றாம் பதிப்பு-பிப்ரவரி-2007.
10. பாரதியார், பாரதியார் கவிதைகள். பாவை பிரிண்டர்ஸ்,(பி) லிட், இராயப்பேட்டை, சென்னை-14 ஜீன்.2012.
11. பூவுலகின் நண்பர்கள், சூழலியல் ஓர் அறிமுகம்,சவுத் ஏசியன் புக்ஸ் 6.1தாயார்சாகிப் 2-ஆவது தெரு, சென்னனை-01.மூன்றாம்பதிப்பு -1994.
12. ராஜநாராயணன், கி. கோபல்ல கிராமம், செல்மா,2 சிவன் கோயில் தெற்குத் தெரு, சிவகங்கை -6023560. அக்டோபர்-1993
13. வைரமுத்து கள்ளிக்காட்டு இதிகாசம்.சூர்யா லிட்ரேச்சர்(பி) லிட்,ட்ரஸ்ட்புரம் சென்னை-24, செப்டம்பர்-2001.